
# வானவில்

VAANAVIL

இதழ் - 76
சித்திரை 2017

ISSUE – 76
APRIL 2017


# உள்ளூராட்சித் தேர்தல்களை உடன் நடத்துக!



இலங்கையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக உரிய காலத்தில் நடாத்தாது இழுத்தடிக்கப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இந்த வருடத்துக்குள் நடாத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் இன்னும் மேலதிகமாக ஒரு வருடம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இழுத்தடிக்கப்படப் போகின்றது என்பதே. அதன் பின்னரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமா என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை.

இந்த விடயத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மட்டுமே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை காலதாமதம் இன்றி உடனடியாக நடாத்தும்படி அரசை அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி என்ற அழகான பதாகையை வைத்துக் கொண்டு இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, எதிர்க்கட்சிப் பிரதம கொறடா பதவியை வைத்துக் கொண்டிருக்கும் ஜே.வி.பியோ, முஸ்லீம் மக்களின் பிரதான கட்சியான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசோ, இந்திய வம்சாவழி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மனோகணேசன் தலைமையிலான முற்போக்குக் கூட்டணியோ பேச்சுமூச்சு இல்லாமல் இருக்கின்றன.

அதற்குக் காரணம் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தால் என்ன செய்யும் என்று நன்கு தெரிந்து கொண்டே இந்தக் கட்சிகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்து இந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வந்தன.

எனவே இந்த அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டாலும் பரவாயில்லை, தமது பதவியையும் சொத்துச் சுகங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதும் என இவர்கள் கருதுகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்று அதில் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினார். அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஒரு சோதிடர் கொடுத்த ஒரு முட்டாள்தனமான ஆலோசனை காரணமாக அவர் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்கள் முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடாத்தப்போய் இருந்த பதவியையும் இழக்க வேண்டியதாயிற்று. இல்லாவிடினும் கூட சர்வதேச பிற்போக்கு சக்திகள் மகிந்தவை

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

# இது அனர்த்தமா அல்லது படுகொலைகளா?

தமிழ் – சிங்கள புதுவருடமான 14.04.2017 அன்று கொலன்னாவை நகரசபைக்குட்பட்ட பிரதேசமான மீதொட்டமுல்லயில் திண்மக்கழிவு (குப்பை) மேடு சரிந்ததில், அதனைச்சூழ இருந்த 147 வீடுகள் புதையுண்டு, மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரையில் 30 சடலங்கள் மீடகப்பட்டுள்ளன. மேலும் குறைந்தது 20 பேராவது புதையுண்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்காக வேறு இடங்களிலிருந்து வந்த மக்களும் அங்கு கூடியிருந்ததால் இறந்தவர்களின் எண்ணிக்கையினைச் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதாகத் தெரியவருகின்றது. உலகெங்கிலும் அடிக்கடி மண்சரிவு மற்றும் பனிச்சரிவு ஏற்படுவதுபற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் திண்மக்கழிவு மேடு சரிந்து இவ்வளவு தொகையாக மக்கள் இறந்தது முதன்முறையாக இலங்கையிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

மீதொட்டமுல்லயில் சுமார் 28 ஏக்கர் நிலப்பரப்பில், கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் கொட்டப்படுகின்றன. இங்கு தினமும் 850 தொன் (8 இலட்சத்து 50 ஆயிரம் கிலோ) திண்மக்கழிவுகள் கொட்டப்படுவதாகத் தெரியவருகின்றது. இதனால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் சுகாதாரக்கேடுகளால் அப்பகுதியைச் சூழவுள்ள 8 கிராம சேவகர் பகுதிகளில் வாழும் 8700 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரம் மக்கள் கடந்த 20 வருடங்களாகப் பாதிப்புக்களைச் சந்தித்து வந்துள்ளனர். இந்த திண்மக்கழிவு மேட்டின் உயரம் 100 மீட்டருக்கும் அதிகமானதாகும். இங்கு ஏறத்தாள 235 இலட்சம் தொன் நிறையுடைய திண்மக்கழிவுகள் சேர்ந்திருப்பதாக கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அமைச்சரொருவர் பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தக் கணக்குத் தெரிவித்த பின்னர், கடந்த 14 மாதகாலத்தில் மேலும் மூன்றரை இலட்சம் கழிவுகள் அங்கு கொட்டப்பட்டுள்ளன.

கடந்த 5 வருடங்களாக இந்தக் கழிவு மேட்டுக்கெதிராக மக்கள் பல போராட்டங்களை நிகழ்த்தியுள்ளனர். கடந்த அரசாங்கத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கெதிராக பொலிசாரின் வன்முறையும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபை ஆட்சி ஐக்கிய தேசியக்கட்சியிடமும், நாட்டின் ஆட்சி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியிடமும் உள்ளதால், இப்பிரச்சனையை தீர்க்க முடியாதுள்ளதாக அப்போது காரணம் கூறப்பட்டுள்ளது. ஆனால் 2015 இற்குப் பின்னர், இரு கட்சியும் சேர்ந்து ஆட்சி செய்கின்ற நிலை உருவாகியபோதும் இப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை. 2015 ஆண்டு ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தி கழிவுகள் கொட்டப்படுவது 2 நாட்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள், பாதாளக் குழுவினர் துணைகொண்டு தாக்கப்பட்டுமுள்ளனர். கடந்த மாதம் ஆறாம் திகதியும் அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

திண்மக்கழிவு மேட்டுக்கெதிரான போராட்ட அமைப்பின் தலைவர் கீர்த்திரத்தனவின் மூன்று குழந்தைகள் இச்சரிவில் புதையுண்டு பலியாகியதுடன், அவரது மனைவியும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். "நாம் இதனை எப்போதும் கூறினோம். இவ்வாறு நடக்குமென்றே கூறினோம். ஏன் இறுதிவரை எவரும் விளங்கிக்கொள்ளவில்லை. நாட்டின் ஆட்சியாளர்களுக்கு இதனை விளங்கிக்கொள்ள முடியாமல் போனதேன்? இந்த அரசிற்கும், இதற்கு முன்னர் இருந்த அரசிற்கும் கூறினோம். யாரும் இதனைக் கருத்திற் கொள்ளவில்லை. அனைவரும் ஒன்றிணைந்து எம்மைக் கொன்று குவித்தனர்." என்று கீர்த்திரத்தன அழுதவாறு கூறியுள்ளார்.

கொழும்பு மாநகரக் கழிவுகள் மாத்திரமன்றி, பொதுவாகவே திண்மக்கழிவுகளை என்ன செய்வதென்பது ஓர் உலகளாவிய பிரச்சனை. ஆனால் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இது ஒரு பிரச்சனையேயல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். திண்மக்கழிவுகளில் உணவுக்கழிவுகள், மருத்துவக்கழிவுகள், எலக்ரோனிக் கழிவுகள், கட்டிடக்கழிவுகள், தொழிற்சாலைக்கழிவுகள் என பல வகையுண்டு. இவற்றை பொதுவாக உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் என இரண்டாக பிரிக்கலாம். அதாவது மறுசுழற்சி செய்யத்தக்க, மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகளாகப் பிரிக்கலாம். பிளாஸ்டிக், பேப்பர், கண்ணாடி, உலோகங்கள் போன்றவற்றை மறுசுழற்சி செய்யலாம். காய்கறி, உணவு, தாவரம் போன்ற மறுசுழற்சி செய்ய முடியாத உக்கும் கழிவுகளிலிருந்து உரம், மீதேன் வாயு போன்றவற்றைத் தயாரிக்கலாம். உக்கும் கழிவுகளை நீண்ட நாட்களுக்குக் கொட்டிக் குவித்து வைப்பதால், அது மீதேன் வாயுவை உண்டாக்கும். இது எரியக்கூடியது. இது குப்பைகளில் கலந்துள்ள பிளாஸ்டிக், இரப்பர் முதலான உக்காத குப்பைகளோடு சேர்ந்து எரியும்போது சுற்றஞ்சூழலுக்கு பல பாதிப்புகளை ஏற்படுத்தும்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் திண்மக்கழிவுகளுக்கு என்ன நடக்கிறது? கழிவுகளை மொத்தமாக சேகரித்து அதை அப்படியே கலந்துகட்டி நகரிற்கு அல்லது கிராமத்திற்கு ஒதுக்குப்புறமாக இருக்கிற இடங்களில் கொட்டி நிரப்புகின்றது கழிவுகள் அதிகரிக்க, அதிகரிக்க, புதிதாக இடம் பார்த்து, அந்த இடத்தில் கொட்டுவதும் தொடர்கிறது. அதாவது கொழும்பு மாநகரக்கழிவுகளுக்கு மீதொட்டமுல்லயில் இடமில்லையென்ற நிலைமை உருவாகியவுடன், பிலியந்தல – கரதியானவில் கொட்டுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அங்குள்ள மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதால், இப்போது புதிய இடம் தேடுகிறார்கள்!

இந்தத் திண்மக்கழிவு மேட்டினைச் சுற்றி வாழ்ந்தவர்கள் விளிம்பு நிலை மக்கள். இந்த மக்கள் தங்களுக்கு நேரவிருக்கும் அபாயத்தை எண்ணி பல போராட்டங்களை முன்னெடுத்தார்கள். முன்னைய, தற்போதைய ஆட்சியாளர்களுடன் நேரடியாக பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார்கள். வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறு மக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து, மக்களைப் பலிகொள்ளும் ஆட்சியாளர்களை தண்டிக்கும் நிலை இலங்கையில் உருவாகுமா?


**வானவில்**

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.


'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் – ஆசிரியர் குழு

# இலங்கை அரசின் மேற்கு நோக்கிய இன்னொரு அடியெடுப்பு!

வட கொரியாவைச் சேர்ந்த நால்வர் இலங்கையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்ள வருகை தர இருந்த வேளையில் நாட்டுக்குள் வருவதற்கு இலங்கை அரசாங்கம் விசா மறுத்திருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தற்போதைய அரசாங்கம் மேலும் மேலும் மேற்கத்தைய சார்பாக மாறி வருவதின் இன்னொரு வெளிப்பாடு என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

2017 மார்ச் 17ஆம் திகதி இலங்கை – வட கொரிய நட்புறவுச் சங்கம் கொழும்புக்கு அருகே கட்டுநாயக்க பகுதியில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கருத்தரங்கில் வட கொரியாவுடன் யப்பான், பங்களாதேஸ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சில சுயசார்புக் குழுக்கள் பங்குபற்ற இருந்தன.

இவைகளில் வட கொரிய குழுவுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வட கொரியத் தூதுக்குழுவுக்கு அனுமதி வழங்கினால் தென் கொரியாவுடன் உள்ள உறவு பாதிக்கப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்ததாக, இலங்கை – வட கொரிய நட்புறவுச் சங்கத்தின் தலைவர் தமிந்த வெல்பொல தெரிவித்திருக்கிறார். இதேவேளை வட கொரிய தூதுக்குழுவுக்கு விசா பெற்றுக் கொடுப்பதற்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்ட போதிலும் அதுவும் பலனளிக்கவில்லை.

வட கொரியத் தூதுக்குழுவுக்கு விசா மறுத்ததிற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு சொல்லும் காரணம் வியப்புக்குரிய ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் முன்னைய இலங்கை அரசுகள் (ஐ.தே.க. அரசுகள் உட்பட) எல்லாமே வட – தென் கொரியாக்களுடன் சமமான உறவுகளைப் பேணி வந்திருக்கையில், தன்னை ஏகாதிபத்திய எதிர்ப்பு கட்சி எனச் சொல்லிக் கொள்ளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்திருக்கும் இன்றைய அரசு மட்டும் வட கொரியத்




தூதுக்குழுவுக்கு விசா மறுப்பது, முழுக்க முழுக்க அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

வட கொரியா பொருளாதார ரீதியாக பெருமளவில் இலங்கைக்கு உதவாவிட்டாலும், இலங்கை சர்வதேச அரங்கில் நெருக்கடிகளைச் சந்தித்த நேரங்களில் தன்னலம் பாராது இலங்கைக்கு ஆதரவளித்து வந்துள்ளது. அந்த நன்றிக் கடனை தற்போதைய மேற்கத்தைய சார்பு இலங்கை அரசு முற்றாக மறந்து செயல்படுகின்றது.

***தனபதி***

முதலில் யப்பானிய ஆக்கிரமிப்பையும், பின்னர் அமெரிக்க ஆக்கிரமிப்பையும் எதிர்த்து முறியடித்தே வட கொரியா என்ற சோசலிச நாடு உருவானது. சீனாவிலும் வட கொரியாவிலும் சோசலிச அரசுகள் அமைந்த பின்பு, அமெரிக்கா அவற்றைச் சுற்றியுள்ள தனது நட்பு நாடுகளான தென் கொரியா, யப்பான், தாய்வான் என்பனவற்றில் தனது ஆயிரக்கணக்கான துருப்புகளையும், நவீன போர்த்தளபாடங்களையும் குவித்து வைத்திருப்பதுடன், அந்த நாடுகளுடன் அடிக்கடி போர்ப் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் எந்த நேரமும் தனது நாட்டின் மீது போர் தொடுக்கலாம் என்று அஞ்சும் வட கொரிய அரசு, தற்பாதுகாப்புக்காக என்று சொல்லி அணுவாயுதங்களையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும்தொடர்ந்து பரீட்சித்து வருகின்றது. இதன் காரணமாக கொரிய தீபகற்பத்தில் பெரும் பதட்ட நிலை தொடர்ந்து நிலவி வருகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இலங்கையின் தற்போதைய மேற்கத்தைய சார்பு அரசு, முதல் தடவையாக வட கொரிய தூதுக்குழு ஒன்றுக்கு விசா மறுத்துள்ளது.

இதற்கு முன்னரும் 1971இல் ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்ற போது, அந்தக் கிளர்ச்சிக்கு சீனாவும் வட கொரியாவும் ஆயுதங்கள் விநியோகித்ததாக ஐ.தே.கவும், அன்றைய சிறீமாவோ அரசில் இருந்த வலதுசாரி சக்திகளும் பொய்ப் பிரச்சாரமொன்றைக் கட்டவிழ்த்துவிட்டு, அந்த இரு நாடுகளுடனான உறவைத் துண்டிக்க வைக்க முயன்றன. ஆனால் சிறீமாவோ அரசு அந்தப் பொய்ப் பிரச்சாரங்களை முற்றிலுமாக நிராகரித்துவிட்டது.

அதுபோல இன்றைய மைத்திரி – ரணில் குழுவினரும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் சீனாவுக்கு எதிராக மிகவும் மோசமான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர். பின்னர் தமது மேற்கத்தைய எஜமானர்கள் உதவாத வங்குரோத்து நிலையில் சீனாவின் காலடியில் சாஸ்டாங்கமாகப் போய் விழுந்தனர்.

இப்பொழுது தமது மேற்கத்தைய எஜமானர்களைத் திருப்திப் படுத்துவதற்காக வட கொரியாவைச் சீண்டிப் பார்க்கின்றனர்.

---

கம்யூனிஸ்ட்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்பு தனித் தாதுகளால் ஆக்கப்பட்டவர்கள். உலகப் பாட்டாளிவர்க்கப் படையின் நேர் நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனினின் அணியில் அங்கத்தினர்கள் இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதை விட, சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை. தோழர் லெனினால் அமைக்கப்பெற்று, அவரின் தலைமையில் இயங்கிய கட்சியில் உறுப்பினர் என்பதைவிட, சிறந்த பெருமை வேறொன்றும் இல்லை

**–ஸ்டாலின்**

# ஜே.வி.பியும் தேசிய இனப் பிரச்சினையும்

**1967** இல் ரோகண விஜேவீரவினால் ஆரம்பிக்கப்பட்ட ''ஜே.வி.பி'' என்று அழைக்கப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (தமிழில் மக்கள் விடுதலை முன்னணி) இப்பொழுது 50 வயது. அந்த இயக்கம் 1971 எப்ரலில் நடாத்திய முதலாவது ஆயுதக் கிளர்ச்சிக்கு (இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி ஒன்றும் 1988 – 89 காலப்பகுதியில் நடாத்தப்பட்டது. அப்பொழுதுதான் ரோகண விஜேவீரவும் ஜேவிபி தலைமையும் அரச படைகளால் கைது செய்யப்பட்டு அழித்தொழிக்கப்பட்டனர்) இப்பொழுது 46 வயது.

ஜே.விபிக்கு இனிமேலும் ஒரு ஆயுதக் கிளர்ச்சி செய்யும் உத்தேசம் இருப்பதாகத் தெரியவில்லை. அது இப்பொழுது முற்றுமுழுதாக முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் ஊறிய கட்சியாக மாறிவிட்டது.

ஜே.வி.பி ஸ்தாபிதத்தின் 50 ஆண்டு நிறைவையும், அதன் முதலாவது ஆயுதப் போராட்டத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவையும் நினைவு கூர்ந்து எழுதும் இச்சிறு கட்டுரையில் அந்த இயக்கத்தின் முழு வரலாறையும் சொல்லிவிட முடியாது. எனவே இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் அதன் எரியும் பிரச்சினையாக இருந்து வரும் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் அந்த இயக்கத்தின் நிலைப்பாடும் செயல்பாடும் எப்படி இருந்து வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம்.

பொதுவாக இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால், பிரதான அரசியல் கட்சிகளாக சிங்கள மக்கள் மத்தியில் செயல்படும் கட்சிகள் சிங்கள தேசியவாதத்தையும், சிங்கள இனவாதத்தையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறவதற்காகவே அவை தேசியவாதத்தையும் இனவாதத்தையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தின என்ற வலுவான கருத்து நிலவுகின்றது. அதை நாடாளுமன்ற சந்தர்ப்பவாதம் என அழைக்கின்றனர்.

ஆனால் ஜே.வி.பியைப் பொறுத்தவரை, அது நாடாளுமன்றத் தேர்தல்களில்



ஈடுபடுவதற்கு முன்பே ஒரு சிங்கள இனவாதக் கட்சியாகத் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறது. அதுவும் தன்னை ஒரு சோசலிசக் கட்சி என்று சொல்லி கொண்டு, மார்க்சிய மூலவர்களான மார்க்ஸ்சும், ஏங்கெல்ஸ்சும், லெனினினும் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக வரையறுத்துச் சொன்ன கோட்பாடுகளுக்கு எதிராகத்தான் ஜே.வி.பி. செயல்பட்டு வந்திருக்கிறது. ஜே.வி.பியின் ஆரம்பமே அந்த வழியில்தான் தொடங்கியது.

அப்போதைய சோவியத் யூனியனின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள பட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புக்காக அனுப்பப்பட்ட ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜேவீர, படிப்பைத் தொடர முடியாமல் சோவியத் அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்டு இலங்கை வந்து சேர்ந்தார். வந்ததும் உடனடியாகவே நா.சண்முகதாசனை பொதுச் செயலாளராகக் கொண்டு செயல்பட்ட சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்ட பரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து வேலை செய்யத் தொடங்கினார்.

சோவியத் அரசாங்கத்தின் திரிபுவாதப் போக்கை தான் விமர்சித்ததாலேயே அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டதாக அப்பொழுது விஜேவீர சொல்லித் திரிந்தார். (ஆனால் இலங்கையில் வேகமாக செல்வாக்குப் பெற்று வந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஊடுருவி அதைச் சீர்குலைப்பதற்காகவே திட்டமிடப்பட்ட முறையில் விஜேவீர அனுப்பப்பட்டுள்ளார் என்ற சந்தேகம் கட்சிக்கு இருந்ததால் அவர் மீது கட்சி அவதானத்துடனேயே இருந்து வந்தது)

விஜேவீர கட்சியுடன் இணைந்து வேலை செய்த நேரத்தில் கட்சியின் தலைமையில் செயல்பட்டு வந்த வாலிபர் அமைப்பான இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் தேசிய மாநாடு ஒன்று பதுளையில் நடைபெற்றது. விஜேவீர மாநாட்டு வேலைகளில் தீவிர பங்கெடுத்துச் செயல்பட்டார். அப்பொழுதே அவரது சிங்களத் தேசியவாத உணர்வு வெளிப்பட்டுவிட்டது. அதாவது அந்த மாநாட்டில் விஜேவீர முயற்சி எடுத்து பிரித்தானியருக்கு எதிராகப் போராடிய சிங்களத் தேசியவாதியான புரன் அப்பு மீது

வாலிபர் மாநாட்டுப் பிரதிநிதிகள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். வழக்கமாக எந்தவொரு கம்யூனிஸ்ட் இயக்க நிகழ்ச்சிகளிலும் தேசியவாதிகள் நினைவுகூரப்படுவதோ, கௌரவிக்கப்படுவதோ இல்லை.

விஜேவீர வாலிபர் மாநாட்டு வெற்றிக்குத் தீவிரமாக உழைத்ததிற்குக் காரணம் வாலிபர் சம்மேளனத்தின் அடுத்த பொதுச் செயலாளராக வர வேண்டும் என்ற அவரது நோக்கம்தான். ஆனால் அவரது நோக்கத்தை சண்முகதாசன் குழுவினர் தந்திரமாக முறியடித்துவிட்டனர். அதனால் ஆத்திரம் அடைந்த விஜேவீர பரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறி தனது சொந்தக் கட்சியான ஜே.வி.பியை 1967இல் உருவாக்கினார்.

ஜே.வி.பியின் உருவாக்கத்துக்கான பிரச்சாரத்தின் போது இனவாதத்தையே விஜேவீர ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினார். அதாவது சண்முகதாசன் என்ற தமிழன் தலைமையில் இலங்கையில் புரட்சி ஒன்றை நடாத்த முடியாது, சிங்கள மக்கள் அதை ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் எனப் பிரச்சாரம் செய்தார். அத்துடன் சண்முகதாசன் மலையகத்தில் வாழுகின்ற இந்திய வம்சாவழி தமிழ் தோட்டத் தொழிலாளர்களை வைத்தே இலங்கைப் புரட்சியை நடாத்தத் திட்டமிடுகிறார் என்றும், அது சாத்தியப்படாது, இலங்கைக்கு ஆபத்தானது என்றும் பிரச்சாரம் செய்தார்.

அதுமட்டுமின்றி, விஜேவீர தனது ஜே.வி.பி. இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில் அதை வளர்ப்பதற்காக இளைஞர்களுக்கு ஐந்து தலைப்புகளில் அரசியல் வகுப்புகளை நடாத்தினார். அதில் ஒன்று ‘இந்திய விஸ்தரிப்பு வாதம்’ பற்றியது. இந்தத் தலைப்பு விஜேவீரவின் சொந்தத் தலைப்பு அல்ல. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிடமருந்து இரவல் வாங்கிய தலைப்பு ஆகும்.

இந்தியா சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் ஆக்கிரமிப்பு யுத்தங்களில் ஈடுபட்டதுடன், தன்னைச் சுற்றிவர உள்ள எல்லா நாடுகளுடனும் எல்லைச் சச்சரவுகளில் ஈடுபட்ட பின்னருமே, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி இந்திய அரசின் அயல் உறவுக் கொள்கையின் தன்மையை வர்ணிப்பதற்காக ‘இந்திய விஸ்தரிப்புவாதம்’ என்ற பதத்தைப் பயன்படுத்தியது.

ஆனால் விஜேவீர இந்தப் பதத்துக்கு வேறு விளக்கம் கொடுத்தார். அவர் இலங்கையின் மலையகப் பகுதிகளில் பணிபுரிந்த தமிழ் தோட்டத் தொழிலாளர்களைத் தாக்குவதற்கு இச்சொல்லைப் பயன்படுத்தினார். அத்தொழிலாளர்கள் பிரித்தானிய காலனித்துவவாதிகளால் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்டதின் காரணமாகவும், அவர்கள் தங்கள் வீடுகளில் இந்தியத் தலைவர்களான காந்தி, நேரு, விவேகானந்தர், அண்ணாத்துரை போன்றவர்களின் படங்களைத் தொங்கவிட்டிருந்த காரணத்தாலும், அவர்களை ‘‘இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகள்’’ என விஜேவீர வர்ணித்தார்.

இது ஒருபுறமிருக்க, சோசலிசம் பற்றியும், இன சமத்துவம் பற்றியும் பேசிய ஜே.வி.பி., 1971இல் நடாத்திய தனது முதலாவது ஆயுதக் கிளர்ச்சிக்கு முழுப் பாட்டாளி வர்க்கமான மலையக மக்களையோ அல்லது வடக்கு கிழக்கில் இன ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களையோ அணி திரட்டவில்லை என்பதும் தற்செயலான ஒரு நிகழ்ச்சி அல்ல.

1971 ஆயுதக் கிளர்ச்சிக்குப் பின்னர் மோதலில் இறந்தவர்கள் போக, எஞ்சியவர்களில் இயக்கத் தலைவர் விஜேவீர உட்பட பல்லாயிரக்கணக்கானோரை அப்போதைய சிறீமாவோ பண்டாரநாயக்க அரசு கைதுசெய்து சிறையில் அடைத்திருந்தது. ஆனால் 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு அவர்கள் அனைவரையும் நிபந்தனை ஏதும் இன்றி விடுதலை செய்தது.

அதன் பின்னர் ஜே.ஆர். அரசின் ஆதரவுடன் ஜே.வி.பி. நாடு முழுவதும் தீவிரமான பிரச்சாரத்தை முன்னெடுத்தது. யாழ்.குடாநாட்டிலும் அதன் பிரச்சாரம் ஆரம்பமானது. அதற்காக ஜே.வி.பி. சுன்னாகத்தில் அலுவலகம் ஒன்றைத் திறந்தது. ஆனால் தனது வட பிரதேச அமைப்பாளராக வட பகுதியைச் ரேந்த தமிழர் ஒருவரை நியமிப்பதில் நம்பிக்கை இல்லாததாலோ என்னவோ, தென்னிலங்கைப் பெரும்பான்மை இனத்தவரான பொன்சேக என்பவரையே தனது அமைப்பாளராக நியமித்தது. (தற்பொழுது ஜே.வி.பியும் சேர்ந்து ‘நல்லாட்சி’யை பதவிக்குக் கொண்டுவந்த பின்னர், மீண்டும் அது யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. இம்முறையும் வட பகுதியைச் சேர்ந்த எவரையும் ஜே.வி.பி. தனது யாழ்ப்பாண அமைப்பாளராக நியமிக்கவில்லை. மலையகத்தைச் சேர்ந்த இ.சந்திரசேகரன் என்பவரையே தனது யாழ்ப்பாண அமைப்பாளராக நியமித்திருக்கிறது)

1977 இல் ஜேஆர்.ஜெவர்த்தனவின் கீழ் ஜே.வி.பி. சுதந்திரமாக இயங்க அனுமதிகப்பட்ட பின்னர், தமிழ் மக்களுக்கென ஓர் பகிரங்க பொதுக் கூட்டத்தை வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்தில் ஒழுங்கு செய்தது. அக்கூட்டத்துக்கு ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன்சேக தலைமைதாங்க, ஜே.வி.பியின் அப்போதைய பொதுச் செயலாளர் லயனல் போபகே சிறப்புச் சொற்பழிவாற்றினார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மக்களுக்கு எதிரான சில கொள்கைகளை அறிவித்திருந்தார். அதாவது, காணிக் கொள்கையைப் பொறுத்தவரை சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரும், ஐ.தே.க. தலைவருமான டி.எஸ்.சேனநாயக்கவின் கொள்கையைப் பின்பற்றப் போவதாக அறிவித்திருந்தார். டி.எஸ் தான் இலங்கையில் முதன்முதலாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தவர் என்றபடியால், ஜே.ஆரின் இந்தக் கருத்தின் அர்த்தம் மீண்டும் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடிற்றேங்கள் ஆரம்பிக்கப்படும் என்பதுதான்.

ஜே.ஆரின் அடுத்த திட்டம் சகல பாடசாலைகளிலும் மும்மொழித் திட்டத்தை அமுல்படுத்துவது என்பது. இது பார்ப்பதற்கு நல்ல திட்டம் போல் தோன்றினாலும் இதன் பின்னணியில் உள்ள ஜே.ஆரின் கபடத் திட்டம் என்னவென்றால், மீண்டும் தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களத் திணிப்பை நடைமுறைப்படுத்துவதுதான்.

தமிழ் மக்கள் ஜே.ஆரின் இந்த அறிவிப்புகள் பற்றிச் சந்தேகிப்பதற்குக் காரணம் இருந்தது.

ஏனெனில், 1977 பொதுத் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ஜே.ஆர்., ‘‘மீண்டும் ஒரு பண்டா – செல்வா உடன்படிக்கை ஏற்பட்டால், மீண்டும் கண்டி யாத்திரை செல்வேன்’’ எனப் பேசியிருந்தார். இதன் அர்த்தம் என்னவெனில். 1957இல் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அப்பேதைய பிரதமர் பண்டாரநாயக்கவுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டபொழுது, அதற்கெதிராக ஜே.ஆர். பௌத்த பிக்குமார்களைக் கூட்டிக்கொண்டு கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டு அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தது போல, மீண்டும் அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால், மீண்டும்

கிழித்தெறிய வைப்பேன் என்பதுதான்.

ஜே.ஆர். யாழ்ப்பாணத்தில் வைத்து இப்படிப் பேசியதும் மக்கள் ஆக்ரோசமாகக் கிளர்ந்தெழுந்து அவரது கூட்டத்தைக் குழப்பியதால், அவர் அன்றிரவு யாழ்ப்பாணத்தில் தங்குவதற்குக் கூடப் பயந்து இரவிரவாக காரில் தென்னிலங்கைகக்கு ஓடிச் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்தில் தனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழிவாங்கவே பின்னர் தான் பதிவிக்கு வநததும் 1977, 1981, 1987 ஆகிய ஆண்டுகளில் அவரது அரசு தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்செயல்களைத் தூண்டிவிட்டதுடன், இனப் பிரச்சினையை யுத்தமாகவும் மாற்றியது.

இந்தச் சூழ்நிலையில் ஜே.ஆரின் அறிவிப்புச் சம்பந்தமாக வெள்ளவத்தைக் கூட்டத்தில் பேசிய லயனல் போபகேயிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகளைக் கேட்டவர்கள் இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள். அந்தக் குழுவில் 30 வருடங்களுக்கு முன்னர் கடல் பயணத்தின் போது காணாமல் போன தோழர் வி.விசுவானந்ததேவன், நான் உட்பட சுமார் 10 பேர் வரையில் இருந்தோம்.

ஜே.ஆரின் திட்டங்கள் பற்றிய எமது கேள்விகளுக்குப் பதிலளித்த போபகே, இலங்கையில் எல்லா மக்களும் எல்லா இடங்களிலும் வாழலாம் என்றும், மூன்று மொழிகளையும் கற்பது நல்லதுதானே என்றும் பதில் அளித்தார். அதாவது, ஜே.ஆரின் கபடத்தனமான நோக்கங்களை நல்ல திட்டங்கள் என்பது போல அவர் கூறினார்.

அவரிடம் இன்னொரு முக்கியமான ஒரு கேள்வியையும் நாம் கேட்டிருந்தோம். அந்தக் கேள்வி, ''இனப் பிரச்சினைக்கு உங்கள் தீர்வுத் திட்டம் என்ன?'' என்பதாகும். அதாவது, அரசியல் சாசன ரீதியாக (அமைப்பு ரீதியாக) ஒற்றையாட்சியா, சமஸ்டியா, பிரதேச சுயாட்சியா. இணைப்பாட்சியா என்பதாகும். இந்தக் கேள்வி கேட்டதற்கான முக்கியமான காரணம், ஜே.வி.பி எப்பொழுதும் எல்லா மக்களும் சமம் என்று மொட்டையாகச் சொல்வதுதான் வழக்கமேயொழிய, திட்டவட்டமான தீர்வு முறை எதையும் முன்வைப்பதில்லை.

எமது இந்தக் கேள்விக்கு லயனல் போபகே கடைசிவரை பதிலளிக்கவில்லை. நாம் பல தடவை அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கக் கோரிய பின்னர், அது ஒரு முக்கியமான கேள்வி என்றும், அடுத்த தமது 'செஞ்சக்தி' பத்திரிகையில் அதற்குப் பதில் எழுதப்படும் என்றும் மழுப்பிவிட்டுச் சென்றுவிட்டார். ஆனால் அவரோ அல்லது ஜே.வி.பியோ அந்தக் கேள்விக்கு இன்றுவரை பதிலளிக்கவில்லை. போபகே ஒருமுறை யாழ்ப்பாணம் வந்தபோது எமது யாழ் புத்தக நிலையத்துக்கு வந்தவிடத்து மீண்டும் இனப் பிரச்சினை சம்பந்தமாக நாம் சில பிரச்சினைகளைக் கிளப்பிய போது, அப்பொழுதும் அவர் சரியான பதில் எதுவும் அளிக்கவில்லை.

இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழும் லயனல் போபகே தான் ஒருபோதும் இனவாதியாக இருந்தது இல்லை எனக் காட்டப் பிரயத்தனப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இன்றைய இளம் சந்ததியினர்க்கு (ஜே.வி.பியினர் உட்பட) இத்தகையவர்களின் முன்னைய வரலாறு தெரியாதபடியால் இப்படித் துணிந்து கயிறு திரிக்க முடிகிறது.

பின்னர் ஜே.ஆர். அரசாங்கத்தால் தமிழ் மக்கள் மேல் முழு அளவிலான இன அழிப்பு யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழ் மக்கள் பாரிய அழிவுகளை எதிர்நோக்கிய காலத்திலும். தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக் கொண்ட ஜே.வி.பியினர் தமிழ் மக்களுக்காக உருப்படியான செயல் எதனையும் செய்யவில்லை.

மாறாக, இந்தியாவின் நிர்ப்பந்தத்தால் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக 1987இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்ட போது, ஜே.வி.பி. அதை மூர்க்கத்தனமாக எதிர்த்து, 1957இல் பண்டா – செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட பொழுது ஐ.தே.க அதை எப்படி எதிர்த்ததோ, அதுபோல ஜே.வி.பி. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. பின்னர் பதவிக்காகவும், வசதி வாய்ப்புகளுக்காகவும் ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றினாலும். தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்காக கொண்டு வரப்பட்ட அந்தக் குறைந்தபட்ச தீர்வைக் கூட ஜே.வி.பி. இன்றுவரை ஏற்கவில்லை.

அதன் பின்னர் சந்திரிக தலைமையிலான ஆட்சிக் காலத்தில் 2000ஆம் ஆண்டில் இனப் பிரச்சினைக்கான தீர்வாக இதுவரை காலமும் முன்வைக்கப்பட்ட தீர்வுகளிலேயே மிகச் சிறந்த தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டது. அதையும் வழமைபோல ஐ.தே.க. எதிர்த்து நிறைவேற்றவிடாமல் முறியடித்தது. புலிகளினதும் எனைய சிங்கள இனவாத அமைப்புகளினதும் உதவியுடன் ஐ.தே.க. மேற்கொண்ட அந்த நடவடிக்கையில் ஜே.வி.பியும் முழு அளவில் பங்குபற்றித் தனது பங்களிப்பைச் செய்தது.

பின்னர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சிக் காலத்தில் இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி ஆராய்வதற்காக சர்வகட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டம் கண்துடைப்புக்காகக் கூட்டபபட்டது என தமிழ் தேசியவாதக் கட்சிகள் விமர்சித்த போதிலும், இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தை அக்கூட்டம் உலகத்திற்கு எடுத்து இயம்பியது. ஆனால் அதில் கூட ஜே.வி.பி. பங்குபற்றாமல் பகிஸ்கரிப்புச் செய்தது.

இப்படி காலத்துக் காலம் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைத் திட்டமிட்டுக் குழப்பியடித்து வந்த ஜே.விபியினர், இப்பாழுது ''ரணிலும் சரியில்லை, மைத்திரியும் சரியில்லை, மகிந்தவும் சரியில்லை, எனவே 2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எம்மை ஆட்சிபீடம் ஏற்றுங்கள்'' எனப் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் இவர்களும் சேர்ந்துதான் ஆட்சியில் இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கமொன்றைத் தோற்கடித்து இன்றைய ஏகாதிபத்திய சார்பு வலதுசாரி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர் என்ற உண்மையை மக்கள் மறந்துவிட்டனர் எனக் கருதுகின்றனர் போலும்.

இவ்வளவும் நடந்த பின்னரும் கூட, ஜே.வி.பியினர் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேணடும் என்பதை ஏற்கவில்லை. அண்மையில் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு புலம்பெயர் தமிழ் மக்களிடம் ஆதரவு தேட முயன்ற ஜே.வி.பி தலைவர்கள் சிலர் அந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் எழுப்பிய கேள்விகளால் திக்குமுக்காடிப் போயினர்.

''தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு உங்களது தீர்வு என்ன?'' என்ற தமிழ் மக்களின் கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை. பதிலுக்கு சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள்தான் இருக்கின்றன என்ற பழைய புளித்துப்போன பதிலையே அவர்கள் தமிழ் மக்களின் கேள்விக்குப் பதிலாக அளித்தனர். சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினைகளை விட, தமிழ் மக்களுக்கு இன அடிப்படையிலான பிரத்தியேகப் பிரச்சினைகளும் இருக்கின்றன என்ற பட்டவர்த்தனமான உண்மையை ஜே.வி.பியினர் இன்றும்கூட ஏற்கத் தயாரில்லை.

இந்த நிலைமையில், தமிழ் மக்கள் ஜே.வி.பி. என்ற குட்டி முதலாளித்துவ சிங்கள இனவாதக் கட்சியை ஒருபோதும் நம்பப் போவதில்லை என்ற உண்மையை, அவர்கள் இனிமேலாவது புரிந்து கொள்வார்களோ என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

**– தோழர் மணியம்**

# வாசிப்பனுபவம்:
# "கரும்புனல்"
# (நாவல்)
### எழுதியவர் - ராம்சுரேஸ்




இந்த நாவலின் ஆசிரியர் ராம்சுரேஸ் ஒரு இளைஞர். ஆனால் தனது வாழ்வில் தனக்கு நேரடியாக ஏற்பட்ட அனுபவங்களை ஒரு நாவலாகப் படைத்ததின் மூலம் மிகப்பெரும் கதை சொல்லியாக மக்கள் முன் தோன்றியிருக்கிறார்.

இந்தியாவின் மிக ஏழ்மையான மாநிலங்களில் ஒன்று பீகார். (இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்தில் பீகாரில் மிக மோசமான பஞ்சம் ஏற்பட்டதின் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலம் விபச்சாரத்தை சட்டபூர்வமாக்கிய விந்தையும் நிகழ்ந்தது) அதே நேரத்தில் மிகவும் மோசமான சாதி வெறி பிடித்த மாநிலங்களில் முன்னணியில் உள்ள மாநிலமும் கூட.

பீகாரின் தென்பகுதிதான் பிரிக்கப்பட்டு இப்பொழுது சண்டிஸ்கார் மாநிலமாக புதிதாக உருவெடுத்துள்ளது. இந்தியாவில் 'நக்சலைட்டுகள்' என்று சொல்லப்படும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் செல்வாக்குப் பெற்றுள்ள மாநிலங்களில் சண்டிஸ்கார் முதன்மையானது. இந்தக் கதையின் களம் சண்டிஸ்கர் மாநிலம் உருவாவதிற்கு முந்திய பிரிக்கப்படாத பீகார் மாநிலமாகும்.

இந்த மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கங்களில் ஒரு குறிப்பிட்ட காலம் இந்த நாவலின் ஆசிரியர் ராம்சுரேஸ் பணியாற்றியதின் அனுபவப் பெறுபேறே இந்த நாவல். இந்த நாவலில் அங்கு தான் கண்டு கேட்ட விடயங்களை மிகவும் உணர்வுபூர்வமான மொழி நடையில் நாவலாகப் படைத்துள்ளார். இது அவரின் முதல் நாவல் என்னும் போது ஆச்சரியமாக உள்ளது. அவ்வளவு தூரம் கதை சொல்லும் பாங்கையும், மொழியையும் இலாவகமாகக் கையாண்டுள்ளார்.

பொதுவாக பீகார் போன்ற மாநிலங்களில் உள்ள பழங்குடியினருக்கு சொந்தமான இயற்கை வளங்களை இந்தியத் தரகு முதலாளிகள் பல்தேசிய முதலாளிகளுடன் சேர்ந்து சூறையாடுவதே வழமை. நக்சலைட்டுகளின் போராட்டம் பெரும்பாலும் அதை மையப்படுத்தியே நடைபெற்று வருகின்றது.

இந்த நாவலில் இந்திய மத்திய அரசாங்கத்தின் 'கோல் இந்தியா' என்ற நிறுவனம் எப்படி பீகாரின் பழங்குடி மக்களின் நிலங்களை நிலக்கரி எடுப்பதற்காக ஏமாற்றிக் கையகப்படுத்துகிறது என்பதையும், அதற்கு பீகாரின் சாதி வெறிபிடித்த, ஊழல்கார உயர் அதிகாரிகள் எப்படி உதவுகிறார்கள் என்பதையும் தத்ரூபமாகச் சித்தரித்துள்ளார் நாவலின் ஆசிரியர். அந்த ஏழைப் பழங்குடி மக்களின் வளமான நிலங்களை ஏமாற்றிக் கையகப்படுத்தும் இந்த அதிகார வர்க்கம், அந்த மக்களுக்கு மாற்றுக் காணிகள் என்ற பெயரில் ஒன்றுக்கும் உதவாத பாறைகள் நிறைந்த நிலங்களையே வழங்குகிறார்கள்.

இந்த அதிகாரிகள் அந்த மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் போது ஈவிரக்கமற்ற மிலேச்சத்தனமான நடைமுறைகளையும், அதே நேரத்தில் குள்ளத்தனமான தந்திரங்களையும் ஒருங்கே கையாள்வதை நாவலின் ஆசிரியர் சொந்த அனுபவத் தளத்தில் நின்று வெகு அருமையான முறையில் பதிவு செய்துள்ளார்.

தேவையேற்படும் போது அந்த மக்களை கூண்டோடு அழிக்கும் செயலிலும் இந்த இந்த அதிகாரிகள் ஈவிரக்கமின்றி ஈடுபடுகிறார்கள். இந்த அதிகாரிகள் தம்மால் அந்த மக்களை ஏமாற்ற முடியாது என்று கண்டு, இன்னொரு மாநிலத்து அதிகாரியையே (தமிழ்நாடு) கருவியாகப் பயன்படுத்துவதாக நாவல் ஆசிரியர் குறிப்பிடுவது, அவரின் சொந்த அனுபவமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நூல் ஆசிரியரின் சொந்த வார்த்தைகளில் அவரது அனுபவத்தைக் குறிப்பிடுவதாயின்:

"வீடு, குறுகிய நட்புவட்டம், கல்லூரி என்று "பழம்" வாழ்க்கை வாழ்ந்து வந்த எனக்கு, நிலக்கரிச் சுரங்க நகரியங்களில் தனியாக வாழ நேர்ந்தபோது ஏற்பட்ட கலாச்சார அதிர்ச்சி கொஞ்சநஞ்சமானது அல்ல. ஊழலை எப்படியெல்லாம் விஞ்ஞானமாக்கலாம் என்றே ஏகதேசம் சிந்திக்கும் மேலதிகாரிகள், நுனிநாக்கு ஆங்கிலம், நாகரிகமான தோற்றம், உள்ளே சாக்கடையான மனது – கொண்ட எஞ்சினியர்கள், கழட்டும் எஞ்சினை ஒருவேளை கீழ்ஜாதிக்காரன் தொட்டிருப்பானோ என்றெல்லாம் யோசிக்கும் சுரங்க ஊழியர்கள், விவசாயம் செய்வதையும் கலவரத்தில் எதிர்மதக்காரனைப் போட்டுத் தள்ளுவதையும் ஒன்றேபோல் நினைக்கக் கூடிய மக்கள்எந்தக் கல்லூரியும் சொல்லித் தராத வாழும் கலையை எனக்குச் சொல்லித் தந்தது பீகார்.

இந்த நாவலை எழுத எந்தப் பிரயத்தனமும் தேவைப்படவில்லை. பெரும்பாலும் நடந்த சம்பவங்களை ஒரு கதைச் சரட்டில் கோர்ப்பதைத் தவிர."

தமிழில் சுற்றுச்சூழல் சம்பந்தமாக மிகச் சில நாவல்களே வந்திருக்கின்றன. அவற்றுள் இந்த நாவல் குறிப்பிடக் கூடிய ஒன்று எனலாம்.

**-கங்கை**

# இலங்கையின் கேந்திர முக்கியத்துவம்!

இலங்கை உலக வல்லரசுகளின் சதுரங்கக் களமாக மாறியுள்ளது என அடிக்கடி கூறப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் புவியியல் ரீதியாக இந்து சமுத்திரத்தில் அதன் அமைவிடம்தான்.

உலகின் அரைவாசிக் கொள்கலன் கப்பல்கள் இலங்கைக்கு அருகில் உள்ள இந்து சமுத்திரக் கடற்பரப்பின் ஊடாகவே பயணிக்கின்றன. அதேபோல, உலகின் மூன்றிலொரு சரக்குக் கப்பல்களும் இலங்கையை அண்மித்தே செல்கின்றன. ஏனைய கல்பல்களிலும் மூன்றில் இரண்டு பங்கு இலங்கையைத் தொட்டே மலாக்கா நீரிணையின் ஊடாக தென் சீனக் கடலைச் சென்றடைகின்றன.

## பூமியின் ஆதிப் படிவங்கள் கனடாவில் கண்டுபிடிப்பு!

பூமி தோன்றிய போது அதன் மேற்பரப்பில் இருந்ததாகக் கூறப்படும் படிவங்களை கனடியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு பூகற்பவியல் விஞ்ஞானிகள் கனடாவின் கியூபெக் மாகாணத்தில் கண்டு பிடித்துள்ளனர்.

இப்படிவங்கள் 4.3 பில்லியன் (Billion) ஆண்டுகளுக்கு முற்பட்டவை என அவர்கள் கூறுகின்றனர். இந்தத் தகவலை அண்மையில் வெளிவந்த ‘சயன்ஸ்’ (Science) என்ற சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

# துளசியின் மகத்துவம்

நமது முன்னோர்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாமல் துளசி செடியை வளர்த்தார்கள் அல்லவா? அதற்குக் காரணம் என்ன தெரியுமா? துளசி செடி ஒரு நாளைக்கு 20 மணி நேரம் ஒக்சிசினையும், 4 மணி நேரம் ஓசோனையும் வெளியிடுகிறது. துளசி ஓசோனைப் பாதுகாப்பதுடன், பல விதமான நோய்களையும் குணப்படுத்தும் அருமருந்தாகப் பயன்படுகிறது என ஆராய்ச்சிகள் கூறுகின்றன.




# தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள்

சுமார் என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது பாரசீகச் சொல். இதைப் போன்றே தகவல், காயம் இவை அரேபியச் சொற்கள். ஆசாமி, அக்கப்போர், ஊதுபத்தி இவை உருதுச் சொற்கள். அன்னாசி, அலமாரி, ஜன்னல், போர்த்துகிசிய மொழியிலிருந்து வந்தவை. பட்டாணி, சேமியா இரண்டு வார்த்தைகளும் மராட்டி மொழிக்குரியவை. கொலுசு, உருண்டை போன்ற சொற்கள் தெலுங்கு மொழியிலிருந்து வந்தவை.

நன்றி: மங்கையர் மலர்

## தேனீக்கள்

தேனீக்களால் ஒருமுறை 6 மைல் தூரம் பறக்க முடியும். ஒரு தேனீ பறக்கும் போது 16,000 முறை இறக்கைகளை அடித்துக் கொள்ளும். தேனீக்களின் மூக்கில் 5,000 துவாரங்கள் உள்ளன. அவற்றால் அரை கிலோமிற்றர் வரை மணங்களை நுகர முடியும்.

## உலகின் அதி உயரமான பாலம்

சீனாவில் யுனான் மாகாணத்தில் ஸுனாவேய் மலை உச்சியையும். குயுஸு மாகாணத்தின் ஸுய்செய் மலையையும் இணைக்கும் பாலம்தான் உலகிலேயே மிக உயரமான பாலம். நதியின் மீது 1854 அடி உயரத்தில் இந்தப் பாலம் சுமார் 200 மில்லியன் டொலர்கள் செலவில் கட்டப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் இராணுவச் செலவு!

அமெரிக்காவின் இராணுவ வரவு செலவுத் திட்டத்தின் (Military Budjet) தொகை 596 பில்லியன் (Billion) டொலர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இது ரஸ்யா, சீனா உட்பட அமெரிக்காவுக்கு அடுத்ததாகவுள்ள ஏழு நாடுகளில் எந்தவொரு நாட்டினதையும் விடக் கூடுதலானதாகும்.

# மரணித்தும் 63 வருடங்ளாக செல்வாக்குடன் திகழும் ஸ்டாலின்!

அண்மையில் ரஸ்யாவில் மேற்கொண்ட ஒரு கருத்துக் கணிப்பில் 84 வீதமான மக்களின் செல்வாக்கைப் பெற்று தற்போதைய ஜனாதிபதி புடின் முன்னணியில் திகழ்கின்றார். அவருக்கு அடுத்ததாக 63 வருடங்களுக்கு முன்னர் 1954இல் மரணமான ஜோசப் ஸ்டாலின் 46 வீதமான மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளார். கடந்த 16 வருடங்களில் ஸ்டாலினின் செல்வாக்கு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கருத்துக் கணிப்பில் சோவியத் யூனியனில் சோசலிசத்துக்கு இறுதியாகச் சவக்குழி தோண்டி, முதலாளித்துவ மீட்சியை உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்த துரோகி கோபர்சேவ் 8 வீதமான மக்களின் ஆதரவை மட்டும் பெற்று இறுதி இடத்தில் இருக்கின்றார்.

இயற்கையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், ஒருவரது சிந்தனை இயற்கையின் அளவுக்கு விரிவானதாக இருக்க வேண்டும்

–சார்ள்ஸ் டார்வின்

மனிதனுக்கு பேச்சு வருவதற்கு முன்னதாகவே இசையை உருவாக்கவும் ரசிக்கவும் கற்றுக் கொண்டு விட்டான்.

–சார்ள்ஸ் டார்வின்

## மார்க்சிம் கார்க்கிக்கு லெனின் அளித்த பதில்

ஒருமுறை லெனினும் மார்க்சிம் கார்க்கியும் காலை நேரத்தில் நடந்து கொண்டிருக்கும் போது வீதியோரத்தில் சின்னஞ்சிறு குழந்தைகள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருப்பதை அவதானித்தனர். அதைப் பார்த்துவிட்டு லெனின் கோர்க்கியிடம் பின்வருமாறு கூறினார்:

"இந்தக் குழந்தைகள் நம்மைவிட மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வார்கள். நாம் சந்தித்த கசப்பான அனுபவங்களை அவர்கள் சந்திக்க நேரிடாது. கொடுமையான நாட்களை அவர்கள் சந்திக்க நேரிடாது…நாம் செய்தது வரலாற்றில் வாழும். சூழ்நிலைமைகளின் நிர்ப்பந்தங்களின் கீழ் நாம் கொடூரமாக இருக்க வேண்டியிருந்தது. ஆனால் எதிர்காலம் எம்மைக் குற்றவாளிகளாகக் கருதாது. உலகம் ஒருநாள் நம்மைச் சரியாகப் புரிந்து கொள்ளும்".

இதைக் கேட்டுவிட்டு சோவியத் ஆட்சியின் கீழ் எடுக்கப்பட்ட சில ஒடுக்குமுறை நடவடிக்கைகளை கார்க்கி விமர்சனம் செய்தார். கார்க்கியின் விமர்சனத்தைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்டு கோபமடைந்த லெனின் கார்க்கியைப் பார்த்து இவ்வாறு பொரிந்து தள்ளினார்:

"உங்களுக்கு என்ன வேண்டும். இந்தப் பயங்கரமான போராட்டத்தில் மென்மையான தன்மைக்கு ஏதாவது இடமுள்ளதா? ஐரோப்பிய சக்திகள் நம்மைச் சுற்றி வளைத்துள்ளன என்பதுடன், நாட்டிற்குள் எதிர்ப் - புரட்சி நபர்கள் வேகமாகத் தலைதூக்குகின்றனர்…நாம் பக்கவாதம் வந்தவர்கள்போல உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது".

-இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பெரும் தலைவர்களில் ஒருவரான பி.சி.ஜோசி எழுதிய, "லெனினும் இந்திய விடுதலையும்" என்ற நூலிலிருந்து

## கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பும் சமாதானப் பட்டமும் வழங்கிய ஜே. ஆர்.

"கடந்த காலத்தில் குற்றவியல் கும்பலின் தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பட்டோர் ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க, ஐ.ம.சு.கூ போன்ற கட்சிகளைச் சேர்ந்த சக்திமிக்க அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்துள்ளார்கள். கோணவல சுனில், பத்தாகனே சஞ்சீவ, மொரட்டுவசமன், நாவலநிஹால், வம்பொட்ட, ஒல்கொட், சண்டிமாலி போன்ற சில பாதாள உலக கோஷ்டிகளைச் சேர்ந்த குற்றவாளிகள் ஒரு குறிப்பிட்ட காலம் அந்தந்த பகுதிகளில் தங்களுக்கு இருந்த அரசியல் ஆதரவு காரணமாக நாட்டை பீதியில் ஆழ்த்தி வந்தார்கள். கோணவெல சுனில் ஐ.தே.க தலைமையுடன் வலிமையான தொடர்புகளைப் பேணிவந்த முக்கியமான ஒரு கோஷ்டித் தலைவன். இவன் 1983ல் வெலிக்கடை சிறையில் இருந்த 53 கைதிகளை கொலை செய்ததுக்கு பொறுப்பானவன் மற்றும் 1982ல் ஒரு 14 வயதுச் சிறுமியை கற்பழித்தும் உள்ளான். இவன் கொலைக் குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஒரு கொலையாளி என்பது இங்கு குறிப்பிடுவதற்கு முக்கியமானது. இவன் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவினால் முழு தீவுக்குமான சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டதுடன் 1983 முதலாவது ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டான்."

-இ∴ப்ரஹம் நிஸாம் இணையத்தளம் ஒன்றில் எழுதிய கட்டுரையிலிருந்து

## டிஸ்கால்குலியா (Dyscalculia)

பாரதியாருக்கு அவரின் தந்தை கணக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க அழைக்கும் போதெல்லாம்… 'கணக்கு, பிணக்கு, வணக்கு, மணக்கு, ஆமணக்கு' என்று தமிழால் அடுக்குத் தொடர்போல சொல்லிக்கொண்டே போவாராம். மகாகவி பாரதியாருக்கு கணக்குப்பாடம் என்றாலே வேப்பங்காய்தான். இன்றும் நம் பிள்ளைகளில் பலர் மற்ற பாடங்களில் காட்டும் ஆர்வத்தைக் கணிதத்தில் காட்டுவதில்லை. கூர்ந்து கவனித்தால் இப்படியானவர்கள் அநேகமாக, 'டிஸ்கால்குலியா' என்னும் குறைபாடு உடையவர்களாக இருக்கலாம். இவர்களுக்கு எண்கள், கணிதத்துக்கான குறியீடுகள், சூத்திரங்கள் போன்றவற்றை நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. சாதாரணமாக மணி பார்ப்பதில் தொடங்கி, பொருட்களை எண்ணுவது வரை எண்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயமுமே இவர்களுக்குச் சிரமம் தரும்.

## இலண்டனில் தோழர் விஸ்வா நூல் வெளியீட்டு விழா!

தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் அவர்கள் காணாமல் போய் 30 வருடங்களை நினைவு கூர்ந்து அவருடன் பழகிய 25 பேர்கள் எழுதிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த நினைவு நூலின் வெளியீட்டு வைபவம் 2017 மார்ச் 11ஆம் நாள் பிரித்தானியாவின் இலண்டன் மாநகரில் நடைபெற்றது. அத்துடன் தோழர் விசுவானந்ததேவன் தலைமைதாங்கி வழி நடாத்திய தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT), தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) ஆகியவற்றின் மரணித்த தோழர்களை நினைவுகூரும் வைபவமும் அதனுடன் இணைந்து நடைபெற்றது.

நிகழ்வுக்கு நா.சபேசன் தலைமை தாங்கினார். நோர்வேயிலிருந்து வருகை தந்த பேராசிரியர் ந.சண்முகரத்தினம் (சமுத்திரன்) சிறப்புரை ஆற்றினார். நூல் வெளியீட்டுக் குழு சார்பாக நெதர்லாந்தில் இருந்து வருகை தந்த பா. பாலசூரியன் உரையாற்றினார். அத்துடன் நிர்மலா இராஜசிங்கம், மு.நித்தியானந்தன் உட்பட வேறு சிலரும் உரையாற்றினர்.

ஏற்கெனவே இந்த நூலின் வெளியீட்டு விழாக்கள் கிளிநொச்சி, ரொறன்ரோ (கனடா), யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்குடா மதுபான வடிசாலைக்கு மக்கள் கடும் எதிர்ப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடாவில் அர்ஜூன் அலோசியசைத் தலைவராகக் கொண்ட டபிள்யு.எம்.மெண்டிஸ் அன்ட் கோ லிமிட்டெட் நிறுவனம் தானியத்தை அடிப்படையாகக் கொண்ட மதுபான வடிசாலை ஒன்றை அமைப்பதற்கு எடுத்து வரும் முயற்சிக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.


2015 ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று 5 மாதங்களில் மெண்டிஸ் கொம்பனி இந்த மதுபானத் தொழிற்சாலையை அமைப்பதற்கு மைத்திரி – ரணில் அரசாங்கத்திடம் விண்ணப்பித்தது. உடனடியாகவே நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் மேற்பார்வையில் மதுவரி இலாகா அந்த விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்கியது.

இதற்காக இந்தக் கொம்பனி 10.73 மில்லியன் ரூபாவுக்கு கல்குடாவில் 19 ஏக்கர் காணியொன்றைக் கொள்வனவு செய்தது. இந்தத் திட்டத்துக்கு 4.5 பில்லியன் ரூபா (450 கோடி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவில் 1.85 பில்லியன் ரூபா (185 கோடி) மதுபான வடிசாலைக்கு இயந்திரங்களையும், உபகரணங்களையும் வழங்கும் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு உரியதாகும். இதைத் தவிர தண்ணீர், மின்சாரம், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, காப்புறுதி, உள்கட்டமைப்பு ஆகிய வேலைகளுக்கு மேலும் 2.3 பில்லியன் ரூபா (230 கோடி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் திட்டத்தை இப்பகுதி மக்கள் விரும்பாததுடன், தமது எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றனர். அதனால் கோரளைப்பற்று பிரதேச சபையின் உத்தரவுக்கிணங்க இத்திட்டம் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையும் இத்திட்டத்தை ரத்துச் செய்யுமாறு 2016 செப்ரெம்பரில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது. அதே ஆண்டு நொவம்பரில் கோரளைப்பற்று – வாழைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவும் இத்திட்டத்தை எதிர்த்திருந்தது.

திட்டத்தைத் தொடங்க




அனுமதிக்காவிட்டால் நீதிமன்றம் செல்லப் போவதாக மெண்டிஸ் கொம்பனி கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சிகாப்டினுக்கு மிரட்டல் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இதுபற்றி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சிகாப்டின், ''எந்தச் சவாலையும் சட்டப்படி சந்திக்கத் தயார்'' எனக் கூறியுள்ளார்.

## மீ.துரைராசசிங்கம்

மேலும் சிகாப்டின் தெரிவிக்கையில், ''மதுபான பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் முன்னணியில் இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் இப்பகுதியில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இங்குள்ள பெரும்பாலான அரசியல்வாதிகளும் கூட விருப்பமின்றியே இருக்கின்றனர்'' எனக் கூறியிருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டால், அதிலிருந்து வெளியேறும் அசுத்தமான புகை, கழிவு நீர் என்பவற்றால் காற்றும் நீரும் மாசடைந்து சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படலாம் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். இருந்தும் குறிப்பிட்ட கொம்பனி அந்தப் பகுதியில் மதுபான வடிசாலை அமைப்பதில் விடாப்பிடியாக இருப்பதாகவும், அதற்கு அரச மேலிடத்தில் உள்ள சிலரின் ஆதரவு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்திருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் முக்கியஸ்தர்களில் ஒருவரும், முன்னைய அரசில் பிரதி அமைச்சராக இருந்தவருமான ''கருணா அம்மான்'' என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், முன்னைய அரசாங்க காலத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் இருவேறு பகுதிகளில் மதுபான வடிசாலை அமைக்கத் திட்டமிடப்பட்டதாகவும், ஆனால் தாம் அதைத் தடுத்து நிறுத்தியதாகவும் கூறியதுடன், இன்று அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடியுமானால் கல்குடா மதுபானத் திட்டத்தை நிறுத்திக் காட்டட்டும் எனவும் சவால் விடுத்துள்ளார்.

ஆனால் தங்களது சொந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசை அணுகும் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களைப் பாதிக்கும் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அரசுடன் பேசித் தீர்வு காண்பதற்கு இதுவரை எவ்வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இதற்கிடையே இந்தத் திட்டம் சம்பந்தமாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் சிலர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்கள். இதன் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்விதமான வழிமுறைகளையும் மேற்கொள்வதற்கும் தயார் நிலையில் உள்ளனர் என்ற விடயமும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

---

கம்யூனிஸ்ட்டுகளாகிய நாங்கள் சுதந்திரத்தை விரும்புகிறோம். எனவேதான், உண்மையான சுதந்திரத்தை, விரிவான சுதந்திரத்தை, சுதந்திரம் என்ற வார்த்தைக்கு உரிய இலட்சணத்தோடு கூடிய சுதந்திரத்தை மனித குலம் முழுமையும் பெறுவதற்காக எங்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு, விருப்பப்படி பணிவதற்கு நாங்கள் ஒரு வினாடியும் தயங்குவதில்லை.

–ஜூலியஸ் பூசிக்

# 90 வாக்குகள் : இந்திய ஜனநாயகத்துக்கு ஓர் இரங்கற் பா

**அ**ண்மையில் (பெப்ரவரி-மார்ச்) இந்தியாவில் நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டமன்றங்களுக்கு நடந்த தேர்தல்கள் பற்றிய பல்வேறு கருத்துரைகளில் முக்கியமானதொன்று, மாபெரும் மனித உரிமைப் போராளி இரோம் ஷர்மிளா (Irom sharmila)வின் தோல்வியைப் பற்றியதாகும். அந்தத் தோல்வி பற்றி **கிருஷ்ண காந்த்** ஹிந்தியில் எழுதிய கட்டுரையை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து, The Wire இணையதள நாளிதழில் *13.03.2017* அன்று **சித்தார்த் வரதராஜன்** 'Thanks for 90 Votes': In Four Words, an Elegy for Indian Democracy வெளியிட்டுள்ளார். அதன் ஆங்கிலம் வழித் தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும் : **எஸ்.வி.ராஜதுரை**

**ம**லோம், மணிப்பூர், நாள்: நவம்பர் 2, 2000. ஓர் இளம் கவிஞர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கிறார். இராணுவப் படைப் பிரிவொன்று அங்கு வந்து கண்மூடித்தனமாகச் சுட்டு பதினைந்து இளைஞர்களைக் கொல்கின்றது. குற்றவாளிகளையும், ஏன் பயங்கரவாதிகளையும்கூட இவ்வாறு நடத்த அரசியல் சட்டத்தில் இடம் இல்லை.

எவரும் இப்படி ஏன் கொல்லப்பட வேண்டும் என்று கவிஞர் கேட்கிறார். அத்தகைய குற்றத்தை அனுமதிக்கும் சட்டத்தை எதிர்த்துப் போராட முடிவு செய்கிறார். எது அந்தச் சட்டம்? வடகிழக்கு மாநிலங்கள் சிலவற்றிலும் காஷ்மீரிலும் நடைமுறைப்படுத்தப்படும் 'ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம்'தான் (ஆ.ப.சி.அ.-Armed Forces Special Power Act) அது. எவரை வேண்டுமானாலும் தன் விருப்பப்படி சுட்டுத் தள்ளவும், சட்டரீதியான பின்விளைவுகள் எதனையும் எதிர்கொள்ளாமல் இருக்கவும் பாதுகாப்புப் படைகளுக்கு உரிமைகள் வழங்கும் சட்டம்.

அந்த இளம் கவிஞரின் பெயர் இரோம் ஷர்மிளா சானு. அடுத்த நாளிலிருந்து ஆ.ப.சி.அ. சட்டத்தை எதிர்த்து உண்ணாநோன்பு தொடங்குகிறார் ஷர்மிளா. அது அன்னா ஹஸாரெவின் உண்ணாநோன்புகளைப் போன்றது அல்ல. பதினாறு ஆண்டுகள் தமது உண்ணாநோன்பை மேற்கொண்டார். உலகெங்கிலும் நியாயத்துக்காக நடத்தப்பட்ட போராட்ட வரலாற்றில் இதுவரை கேள்விப்பட்டிராத ஒன்று. தற்கொலை செய்ய முயன்றதற்காக அவரைக் காவல் துறைக் காவலில் வைக்கும்படி நீதிமன்றங்கள் ஆணையிட்டன. அங்கு அவரது



மூக்கில் குழாய்கள் செருகப்பட்டு திரவச்சத்து ஊட்டப்பட்டது. ஒருபோதும் வராத வெற்றிக்காக அவர் தொடர்ந்து உண்ணாநோன்பை மேற்கொண்டார்.

இறுதியாக, சென்ற ஆண்டு டெல்லி நீதிமன்றமொன்றில் கண்ணீர் மல்கக் கூறினார்: "நான் உயிர் வாழ, திருமணம் செய்து கொள்ள, காதலிக்க விரும்புகிறேன். ஆனால் நான் இவற்றைச் செய்வதற்கு முன், மணிப்பூரிலிருந்து ஆ.ப.சி.அ. சட்டம் அகற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்". பதினாறு ஆண்டுகளாக அவர் போராடி வந்த, நிறைவேற்ற முடியாமல் தோல்வியடைந்து வந்த கோரிக்கைதான் அது.

தேர்தல் அரசியலில் பங்கேற்பதன் வழியாக இந்தக் கறுப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராடலாம் என்று ஷர்மிளா முடிவு செய்தார். இப்போது நடந்த சட்டமன்றத் தேர்தலில் மணிப்பூர் முதலமைச்சரை எதிர்த்துப் போட்டியிட்டு 90 வாக்குகள் மட்டுமே பெற்றார். எந்த மக்களின் உயிர்வாழும் உரிமையைப் பாதுகாப்பதற்காக அவர் பதினாறு ஆண்டுகள் போராடினாரோ அதே மக்கள், அவரது அரசியல் கனவை மூர்க்கதனமாகக் கொன்றனர். கண்களில் கனவோடு தேர்தல் களத்தில் நுழைந்தார் கண்களில் நீர் வழிய, அந்தக் களத்திலிருந்து வெளியேறுவதாக சனிக்கிழமையன்று[1] அறிவித்தார்: "இங்கு இனி ஒருபோதும் நான் காலடி எடுத்து வைக்கமாட்டேன்". பதினாறு ஆண்டுகள் தமக்கு உணவை, காதலை, தோழமையை மறுத்து வந்தார். அரசியலில் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை அனுபவிப்பதற்கான வாய்ப்பு எதனையும் ஒருபோதும் பெறாமல் தேர்தல் அரசியலைத் துறக்குமாறு இந்த அமைப்பால் நிர்பந்திக்கப்பட்டார்.

ஆ.ப.சி.அ. சட்டத்துக்கு எதிராக காவியத்தன்மை வாய்ந்த உண்ணாநோன்புப் போராட்டத்தை மேற்கொண்ட ஷர்மிளா, அஸ்ஸாம் துப்பாக்கிப்படையின் காவலில் 2005இல் கொல்லப்பட்ட மனோரமாவைப் போல, மனோரமாவின் இறப்பையொட்டி நீதி கேட்டு நிர்வாணமாக நின்று போராடிய பெண்களைப் போல, பஸ்தாரில் கொல்லப்பட்ட மட்காம் ஹிட்னெவையும் ஸுக்மதியையும்[2] போலத் தோல்வியைத் தழுவினார். இந்தத் தோல்விக்கு எதிர்வினையாக அவரது ஆதரவாளர்கள் விருப்பு வெறுப்பின்றிக் கூறினர்: "தொண்ணூறு வாக்குகளுக்கு நன்றி".

ஷர்மிளா பதினாறு ஆண்டுகளாகப் போராடியும் தோல்வியடைந்தும் வந்திருக்கிறார். தவறு செய்கிறவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தான் விரும்பும் எவரையும் சுட்டுக் கொல்வதற்கு இராணுவத்திற்கு உரிமை வழங்கப்படக்கூடாது

என்பதுதான் அவர் கூறிவந்து கொண்டிருப்பவை.

ஒரு மனோரமாவைப் பாலியல் வன்முறைக்குட்படுத்திக் கொல்லவோ, பாதைகள் சந்திக்குமிடத்தில் நின்றுகொண்டிருக்கும் இளைஞர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தவோ, பன்னிரண்டு வயதுக் குழந்தையை 'பயங்கரவாதி' என்று அறிவித்து அதனுடைய தாய்க்கு எதிரேயே அதற்கு 'மோதல்' மரணத்தை சம்பவிக்கவோ இராணுவத்தினரை அனுமதிக்கக்கூடாது என்பதுதான் அவர் கூறிவந்து கொண்டிருப்பவை.

பணமதிப்புக் குறைப்பின் காரணமாக 150 பேர் இறந்து போனதோ, உத்தரப் பிரதேசத்திலுள்ள பெண்களில் பாதிப்பேர் சத்துாட்டக் குறைவால் அவதிப்படுவதோ, ஒவ்வோராண்டும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் வயிற்றுப்போக்காலும் மூளைக்காய்ச்சலாலும் மடிந்துகொண்டு இருப்பதோ எவ்வாறு பிரச்சினையாக இருக்கவில்லையோ, அதேபோல சாமனிய மணிப்பூரிகளின் உயிர்வாழ்வுக்காக ஷர்மிளா தமது வாழ்க்கையில் பதினாறு ஆண்டுகள் போராட்டம் நடத்தியதும் தேர்தலில் ஒரு பிரச்சினையாகக் கருதப்படவில்லை.

சிறையிலிருந்து கொண்டே அமர்மானி திருப்பதியின் மகன் அமன்மானியும்[3] (மனைவியைக் கொன்றதற்காக சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்) மாஃபியாக் கும்பல் தலைவன் முக்தர் அன்ஸாரியும்[4], சுனில் குமார்[5], ரகுராஜ் பிரதாப் சிங்[6], விஜய் மிஷ்ரா[7] போன்ற குண்டர்களும் இலகுவாக தேர்தல்களில் வெற்றியடைகின்ற ஜனநாயகத்தில், வன்முறைக்கும் கொலைக்கும் எதிர்ப்புத் தெரிவித்துத் தமது வாழ்க்கைச் சுடரை அணைய வைத்த இரோன் ஷர்மிளாவின் தோல்வி முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டுவிட்டது. தேர்தலில் போட்டியிட்ட குற்றவாளிகளுக்கும் காடையர்களுக்கும் மிகப்பெரும் பெரும்பான்மை வழங்குவதில் மகிழ்ச்சி கொண்ட வாக்காளர்களின் நெஞ்சை, ஈரம் படிந்த கண்களையும் குழாய்கள் செருகப்பட்ட மூக்கையும் கொண்ட கவிஞரின் முகத்தால் தொடமுடியவில்லை.

தேர்தல் நாளன்று, அவரது தொகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள், தற்போதைய முதலமைச்சரின் வெற்றியையும் ஷர்மிளாவின் தோல்வியையும் மட்டும் உறுதி செய்யவில்லை இந்திய ஜனநாயகம் இறந்து போனதற்கு ஓர் இரங்கற் பாவையும் இயற்றியுள்ளனர்.

---

[1] 11.03.2017.

[2] 2016 ஜுன் 16, 2017 ஜனவரி 17 ஆகிய நாள்களில் சட்டிஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினரால் 'மாவோயிஸ்டுகள்' என முத்திரை குத்தப்பட்டும், பாலியல் வன்முறை செய்யப்பட்டும் 'என்கவுன்டரில்' கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்ட இளம் பெண்கள்.

[3] சமாஜ்வாதிக் கட்சியைச் சேர்ந்தவர் அமர்மானி திருப்பதி. அவரும் அவரது மனைவி மதுமானியும் உத்தரப் பிரதேசப் பெண் கவிஞர் மதுமித ஷுக்லாவைக் கொலை செய்த குற்றத்திற்காக ஆயுள் தண்டனை வழங்கப் பெற்று, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களது மகன் அமன்மானி, தமது மனைவி ஸாராவைக் கொலை செய்துவிட்டு, அந்தப் பெண்மணி சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்று காட்ட முயன்ற குற்றத்துக்காக 2016 நவம்பரில் சிபிஐ-யால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சமாஜ்வாதி கட்சி வேட்பாள்ராக அவர் போட்டியிடுவதை அகிலேஷ் சிங் யாதவ் அனுமதிக்காததால், அண்மையில் நடந்த உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நௌட்வானா தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு, அவருக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற சமாஜ்வாதி கட்சி வேட்பாளரை 32,256 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்த அவர், தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு பிணையில் வெளிவந்துள்ளார்.

[4] உத்தரப் பிரதேசத்தின் மாவ் ஸடார் (Mau Sadar) தொகுதியிலிருந்து ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்தர் அன்ஸாரி, முதலில் பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்தார். பின்னர் கிரிமினல் குற்றச்சாட்டுகளின் காரணமாக அந்தக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர், இந்த ஆண்டில் சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்குச் சில வாரங்களுக்கு முன் மீண்டும் அந்தக் கட்சியில் சேர்க்கப்பட்டார். ஏராளமான கொலை, கொள்ளை வழக்குகள் உள்ள அவர் லக்னோ மாவட்ட சிறையிலிருந்து, மாவ் ஸடார் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு, அவருக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற பாஜக வேட்பாளரை 8698 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

[5] சுனில் குமார்: 2005, 2015 ஆம் ஆண்டுகளில் நடந்த பீஹார் சட்டமன்றத் தேர்தல்களில் நளந்தா தொகுதியிலிருந்து ஐக்கிய ஜனதா தளம் [JD(u)] வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். எம்.பி.பி.எஸ். மருத்துவப் பட்டம் பெற்ற இவர் மீது ஏராளமான குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

[6] ராஜா பய்யா (ராஜா அண்ணன்) என்று பரவலாக அழைக்கப்படும் ரகுராஜ் பிரதாப் சிங், சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்தவர், அகிலேஷ் யாதவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர். இவர் மீது கொலை முதலிய பல்வேறு குற்றங்களுக்காக ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாக இவர் தற்போது டெல்லியிலுள்ள திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அண்மையில் நடந்த உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் பிரதாப்கர் மாவட்டத்தைச் சேர்ந்த குன்டா தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு, பாஜக வேட்பாளரை 1,03,647 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார். இந்தத் தொகுதியில் அவர் தொடர்ந்து ஆறு முறை சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதிலிருந்தே 'வேட்பாளர் பெருமக்கள்' அவர் மீது வைத்துள்ள அபிமானத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

[7] விஜய் மிஷ்ர: அண்மையில் நடந்த உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலுக்குச் சமாஜ்வாதி கட்சி சார்பாகப் போட்டியிடுவதற்கு அகிலேஷ் சிங் யாதவ் அனுமதி மறுத்ததால், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 'நிஷால்' கட்சியின் வேட்பாளராக கியான்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள விஜய் மிஷ்ர மீது ஏராளமான குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படாத, குற்றப் பின்னணிகள் கொண்ட வேறு சிலரும் அண்மையில் நடந்த உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக, சாண்டௌலி மாவட்டத்தைச் சேர்ந்த ஸய்யாடார்ஸா தொகுதியில் பாஜக வேட்பாளராகப் போட்டியிட்டு, தமக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் ஷ்யாம் நாராயண் சிங்கை 14,494 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்த சுஸில் சிங் குண்டர் தலைவராவார். அவரிடம் தோல்வி கண்ட பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளரும் குற்றப் பின்னணிக் கொண்டவர்தான். அவர் இப்போது ராஞ்சி சிறையில் உள்ளார்..

இலஹாபாத் மாவட்டம் மெஜா தொகுதியில் பாஜக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற நீலம் கார்வாரியாவின் கணவரும் முன்னாள் பாஜக சட்டமன்ற உறுப்பினருமான உதய் பான் கார்வாரியா தற்போது மிர்ஜாபூர் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# தோழர் எஸ்.அருளானந்தம் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபமும், அஞ்சலியும்!

**யா**ழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மிக நீண்டகாலம் கொழும்பில் வாழ்ந்து வந்தவருமான தோழர் சின்னத்தம்பி அருளானந்தம் தமது 70 ஆவது வயதில் ஏப்ரல் 07 ஆம் திகதி கொழும்பில் காலமானார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் அருளானந்தம் மாணவப் பருவத்திலேயே முற்போக்கு சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு, 1960 களில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்பட்டார். அந்தக் காலகட்டத்தில் வட பகுதி எங்கும் அக்கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள், மாணவர் போராட்டங்கள் என்பனவற்றில் முன்னணியில் நின்று செயல்பட்டார்.

பின்னர் 1972 இல் இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி



உருவானபோது அதனுடன் இணைந்து செயல்பட்டார். அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் குடியேறிய தோழர் அருளானந்தம், ''ஜனவேகம்'' வாரப் பத்திரிகையின் துணை ஆசிரியராக, அதன் ஆசிரியர் தோழர் சுபைர் இளங்கீரன் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

அதன் பின்னர் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் இணைந்து கொண்ட தோழர் அருளானந்தம், அதன் வெளியீடான ''தினகரன்'' நாளிதழில் முதலில் துணை ஆசிரியராகவும், பின்னர் அதன் செய்தி ஆசிரியராகவும், இறுதியில் அதன் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார்.

தினகரன் பத்திரிகையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சிறிது காலம் ''தினமுரசு'' வார இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

தோழர் அருளானந்தத்தின் இழப்பு முற்போக்கு சக்திகளுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ''வானவில்'' பத்திரிகை சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தோழர் அருளானந்தத்துக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**''வானவில்'' ஆசிரிய குழு**

# வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதவி நீக்கப்பட வேண்டும்!

## வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள்!!

**இ**லங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையின் நலன்களுக்கு எதிராகவும், மேற்கத்தைய நாடுகளின் நலன்களுக்கு ஆதரவாகவும் செயல்படுவதால், அவர் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பதவி நீக்கப்பட வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார கூறியிருக்கிறார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறியிருக்கிறார். மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் எனக்கூறி நாட்டு மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறார். அதேவேளையில் தனது ஐ.தே.கவினரிடம் வெளிநாட்டு நீதிபதிகள் அழைக்கப்படுவார்கள் எனக் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எக்காரணம் கொண்டும் வெளிநாட்டு நீதிபதிகள் அழைக்கப்பட மாட்டார்கள் என உறுதிபடக் கூறியிருக்கிறார். அவரது நிலைப்பாட்டை நான் பாராட்டுகிறேன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# மத்திய வங்கி ஆளுநர் மகேந்திரனின் நடவடிக்கைகள் வங்கியின் அத்திவாரத்தையே ஆட்டம் காண வைத்தன!

## துணை ஆளுநர் வாக்குமூலம்!!

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த மத்திய வங்கியின் துணை ஆளுநரும், நிதிச்சபையின் செயலாளருமான எச்.ஏ.கருணரத்ன கூறுகையில். 2015 பெப்ருவரி 23ஆம் திகதி அர்ச்சுனா மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்ற பின்னர் அவர் வங்கியில் மேற்கொண்ட முக்கியமான உத்தியோகத்தர்களின் உள்ளக இடமாற்றங்களால் மத்திய வங்கியின் அத்திவாரமே ஆட்டம் கண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தக் காலகட்டத்தில் மகேந்திரன் 14 துறைத் தலைவர்களையும், 20 முக்கிய உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்துள்ளார். மொத்தமாக அவர் 501 பேரை இடமாற்றம் செய்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் நால்வர் மத்திய வங்கியின் ஜீவாதாரமான (vital) துறைகளின் தலைவர்களாவர் என்றும், அவரது இந்த நடவடிக்கை சிரேஸ்ட அதிகாரிகள் மத்தியில் இணக்கமின்மையையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியது என்றும் கூறினார்.

அதிகாரிகளின் இரண்டு குழுக்கள் தமக்குள்ளே கலந்துரையாடிய பின்னர் ஆளுநர் மகேந்திரனைச் சந்தித்து நிலைமையை விளக்கினர் என்றும் துணை ஆளுநர் கருணரத்ன ஆணைக்குழு முன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மகேந்திரன் ஆளுநராக வருவதற்கு முன்னர் இடமாற்றங்கள் செய்வதானால் துணை ஆளுநர்களுடனும், துறைத் தலைவர்களுடனும் கலந்தாலோசிக்கும் நடைமுறை இருந்தது என்றும் கூறினார்.

கருணரத்ன தொடரந்து கூறுகையில், தான் உட்பட நான்கு அதிகாரிகள் மகேந்திரனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து நிலைமை பற்றி விளக்கிய போது, தவறுகளைக் களைவதாகத் தெரிவித்தாராயினும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் கூறினார்.

தான், சுனில் மென்டிஸ், அஜித் நிவாட் கப்ரால், அர்ச்சுனா மகேந்திரன் ஆகிய மூன்று ஆளுநர்களுக்கு கீழே பணிபுரிந்துள்ளதாகவும், ஆனால் முன்னைய காலங்களில் இடமாற்றங்கள் இவ்வளவு தூரம் தாக்கத்தை ஏறபடுத்தவில்லை என்றும் கருணரத்தின கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், முன்னைய காலங்களில் ஐந்தாறு துறைத் தலைவர்களுக்கோ, 195 பொது உத்தியோகத்தர்களுக்கோ கூடுதலாக இடமாற்றங்கள் செய்யப்படாததாலும், இடமாற்றங்கள் நீதியான முறையில் மேற்கொள்ளப்பட்டதாலும், துறைகளின் வேலைகளில் குழப்பங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவித்ர்.

ஆணைக்குழு விசாரணைகளின் போது கேட்கப்பட்ட கேள்விகளும் துணை ஆளுநர் அளித்த பதில்களும் வருமாறு:

ஆணைக்குழுவின் உறுப்பினரான உச்ச நீதிமன்ற (Supreme Court) நீதிபதி பிரசன்ன ஜெயவர்தன: வங்கியில் எத்தனை துறைகள் உள்ளன?

கருணரத்தின: முப்பது

நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன: ஒவ்வொரு துறையும் தலைவர் ஒருவரைக் கொண்டுள்ளதா?



கருணரத்தின: ஆம்

நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன: எப்படி 2014இல் 34 துறைத் தலைவர்கள் இடமாற்றத்தைப் பெற்றனர்?

கருணரத்தின: சில துறைத் தலைவர்கள் ஒரு குறுகிய காலம் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு இடமாற்றப்பட்டனர். பின்னர் இன்னொன்றுக்கு.

நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன: யார் இந்த தான்தோன்றித்தனமான (Happhazard) இடமாற்றங்களுக்குப் பொறுப்பு?

கருணரத்தின: எல்லா இடமாற்றங்களும் மகேந்திரனின் அங்கீகாரத்தைப் பெற்றே நடைபெற்றன. எல்லா இடமாற்றங்களும் அவர் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வந்தன.

நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன: இந்த மாதிரியான இடமாற்றங்கள் மத்திய வங்கியின் சரித்திரத்திலேயே அசாதாரணமானவை.

---

13ம் பக்கத்தொடர்ச்சி ...

எனக் கூறினார்.

மேலும் அவர், போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வருவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகவும் ஆவலாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வெளிநாட்டு நீதிபதிகளை போர்க்குற்ற விசாரணைகளில் பங்குபற்ற அனுமதிக்கமாட்டோம், எமது இராணுவத்தினரைத் தண்டிக்க அனுமதிக்கமாட்டோம் எனப் பிரச்சாரம் செய்த போதிலும், உண்மையில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் பங்குபற்றுவதற்கு இலங்கை சம்மதம் தெரிவித்துள்ளது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்

முன்பக்கத் தொடர்ச்சி...

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற விட்டிருப்பார்களோ என்பது சந்தேகத்துக்குரியதே.

ஏதாவது காரணங்களுக்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடாத்தாது ஒருநாள் பிந்தித்தன்னும் மகிந்த ராஜபக்ச நடாத்தியிருந்தால், அன்றைய எதிரணியில் இருந்த இன்றைய ஆட்சியாளர்களும், அவர்களது சர்வதேச எசமானர்களும், 'மகிந்த அரசு ஜனநாயகத்தை மீறுகின்றது' என எத்தகைய கூச்சல் போட்டிருப்பார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இத்தகைய ஜனநாயக ஜம்பவான்களும், அவர்களது ஜனநாயகப் பாதுகாவலர்களும்தான் இன்று உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை உரிய காலத்தில் நடாத்தாது இரண்டரை ஆண்டுகள் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். இந்த அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல் குறித்து நல்லாட்சிக்காகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் கடந்த காலத்தில் உரத்துக் குரல் கொடுத்த சர்வதேச நாடுகளோ, மனித உரிமை இயக்கங்களோ இன்று எதுவும் கூறாமல் மௌனமாக இருக்கின்றன.

இதிலிருந்தே இவர்கள் எலலோரும் கடந்த ஆட்சிக் காலத்தில் மனித உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் உரத்துக் குரல் எழுப்பியது போலியானது என்பதும், அவற்றைப் பயன்படுத்தி இலங்கையில் தமக்குச் சாதகமான ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதே அவர்களது நோக்கமாக இருந்தது எனபதும் தெளிவாகின்றது.

உண்மையில் இலங்கையைப் பொறுத்த வரையில் உள்ளூராட்சி சபைகள் என்பது மத்திய அரசாங்கத்தையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும் விட முக்கியமானது. ஏனெனில் முன்னைய இரண்டையும் விட உள்ளூராட்சிச் சபைகளே கூடுதலாக அடிமட்ட மக்கள் பங்குபற்றும் நிர்வாக அமைப்புகளாகும். அடிமட்டத்தில் மக்களுடைய நாளாந்த விவகாரங்களுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் இந்த உள்ளூராட்சி சபைகளே.

இத்தகைய சபைகளின் தேர்தல்களை அரசாங்கம் இழுத்தடிப்பது என்பது அரசாங்கம் உள் நோக்கத்துடன் செய்யும் ஒரு திட்டமிட்ட செயலாகும். அதற்குக் காரணம் என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.

இன்றைய 'நல்லாட்சி'யின் பங்காளர்களான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தலைக் கண்டு பயப்படுவதே இதற்கான காரணமாகும். ஒரு பக்கத்தில், ஐ.தே.க. தனது மக்கள் விரோதக் கொள்கைகள் காரணமாக நாட்டு மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதால், தேர்தலில் தாம் தோற்றுவிடுவோமோ என்கின்ற அச்சத்தில் இருக்கிறது. அதே அச்சம் சுதந்திரக் கட்சிக்கும் இருக்கின்றது.

இதைத் தவிர, சுதந்திரக் கட்சி பிளவுபட்டிருப்பதும், அதில் ஜனாதிபதி மைத்திரியின் அணியை விட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அணி பலமாக இருப்பதும் சுதந்திரக் கட்சிக்கு தோல்விப் பயத்தை ஏற்படுத்தி இருக்கின்ற இன்னொரு காரணமாகும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தென் பகுதியில் நடைபெற்ற சில கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் அணி பெரும் வெற்றியீட்டிய நிலைமையும், ஐ.தே,கவும், சுதந்திரக் கட்சியும் தோல்வி அடைந்த நிலையும் இந்த உண்மையை எடுத்துக் காட்டியிருந்தன. இதன் அர்த்தம் முன்னைய காலங்களைப் போல ஐ.தே.கவும் சுதந்திரக் கட்சியும் அல்ல எதிரும் புதிருமான கட்சிகள். அவை இரண்டுக்கும் ஒன்றிணைந்த எதிரணிக்கும் இடையிலேயே இன்று பிரதான போட்டி நிலவுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மைத்திரி அணியும் ரணில் அணியும் இணைந்து நின்று போட்டியிட்டதும், அவர்களை தமிழ் - முஸ்லீம் கட்சிகள் ஆதரித்ததும்தான் அவர்களது வெற்றிக்கு அடிப்படையாய் அமைந்தது. ஆனால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் அப்படியான ஒரு சூழல் இல்லாதிருப்பதுடன், ஐ.தே.கவுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பிளவும் அதிகரித்துள்ளது.

இந்த நிலைமையில் ஆட்சியின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்குப் பயப்படுகின்றன. அதனாலேயே சாக்குப் போக்குகளைச் சொல்லி உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதை ஒத்திப் போட்டு வருகின்றன.

ஜனாதிபதி அதிகாரத்தையும் நாடாளுமன்ற அதிகாரத்தையும் வைத்திருக்கும் இந்த இரண்டு பிரதான கட்சிகளும், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி மக்களுக்கான அதிகாரத்தை வழங்குவதை மட்டும் இழுத்தடித்து வருகின்றன. இது ஜனநாயக மறுப்பு மட்டுமல்ல, அதிகாரப் பகிர்வுக்கு எதிரான போக்குமாகும்.

நாட்டில் நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கின்ற அடிமட்ட நிறுவனங்களான உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை உரிய காலத்தில் நடாத்தி அதிகாரங்களை மக்களுக்கு வழங்க மறுப்பவர்கள், அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு எப்படி சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரத்தைப் பங்கிட்டளிக்கப் போகிறார்கள் என்ற நியாயமான கேள்வி இந்த இடத்தில் எழுகின்றது.

உண்மையில் இந்த அரசாங்கம் புதிய அரசமைப்பின் மூலம் சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரத்தைப் பங்கிட்டளிக்கப் போவதாகச் சொல்வது உண்மையானால், முதலில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை இனியும் இழுத்தடிக்காது நடாத்தி அடிமட்ட மக்களுக்கான அதிகாரத்தை முதலில் வழங்கட்டும். அதை விடுத்து பொய் வாக்குறுதிகளை தினமும் அவிழ்த்துக் கொட்டுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

---

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சமாதானத்தை நேசிக்கிறோம் எனவே தான், நாங்கள் போராடுகிறோம். போர் மூள்வதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம்.

–ஜூலியஸ் பூசிக்

# ஆபிரிக்காவில் 2 கோடி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகின்றனர்!

**1945**இன் பின்னர் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப்பெரும் பஞ்சத்தை ஆபிரிக்கா எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக இந்தப் பஞ்சம் தெற்கு சூடான், சோமாலியா, நைஜீரியா மற்றும் தெற்கு யெமன் ஆகிய நாடுகளையே கடுமையாகத் தாக்கியுள்ளது. இதனால் இந்த நாடுகளில் வாழும் சுமார் 20 மில்லியன் (2 கோடி) மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலைமையில் ஜனாதிபதி டொனால்ட் ரம்ப்பின் அமெரிக்க அரசாங்கம் வெளிநாடுகளுக்கான தனது உதவியில் 10 பில்லியன் (1,000 கோடி) டொலர்களைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இது நிலைமையை மேலும் மோசமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக உணவுத் திட்டத்தின் (World Food Programme) ஸ்தாபக நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் இந்த முடிவு, பஞ்சத்தால் வாடும் ஆபிரிக்க மக்களை நினைத்துப் பார்க்க முடியாத அளவு பேரழிக்குத் தள்ளிவிடும் என அத்திட்டத்தின் ஆபிரிக்கப் பேச்சாளரான David Orr தென்னாபிரிக்கத் தலைநகர் ஜோகனஸ்பேர்க்கில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கூறியிருக்கிறார்.

இதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கருத்துத் தெரிவித்த சோமாலிய ஜனாதிபதி Mohamed Abdullahi Mohamed தனது நாட்டுச் சனத்தொகையில் அரைவாசிப்பேர் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குவதாகவும், 15 வீதமானோர் பட்டினியை எதிர்நோக்குவதாகவும், எனவே உலக நாடுகள் தனது நாட்டுக்கு உதவ வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறுபக்கத்தில், புதிதாக உருவான தென் சூடான் நாட்டில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் அகதிகளாக இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர். அவர்களில் ஒரு இலட்சம் பேர் வரை பட்டினிச் சாவை எதிர்நோக்குகின்றனர். சுமார் 7.5 மில்லியன் மக்களுக்கு அவசரமான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

இருந்தும், தென் சூடான் அரசாங்கம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக போதிய அக்கறை செலுத்தவில்லை என ஐ.நா.செயலாளர் நாயகம் Antonio Guterres குற்றம் சாட்டியிருக்கிறார்.

# இலங்கை மலேரியாவை பூரணமாக ஒழித்துள்ளது!

உலக சுகாதார ஸ்தாபனம் 2016 செப்ரெம்பர் 15இல் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையின்படி, இலங்கை மலேரியா நோயை முற்றுமுழுதாக ஒழித்துள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியிருப்பதுடன் (Officialy recognized), இது இலங்கை மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதில் பெரும் வெற்றியீட்டியுள்ளது என்பதையும் அங்கீகரித்துள்ளது.

மலேரியா நோய்த் தாக்கம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

1. இலங்கையில் இந்த நோயால் கடைசியாகத் தாக்கப்பட்டவர் பற்றிய விபரம் 2012 இல்தான் அறிவிக்கப்பட்டது.
2. இருப்பினும் முறையே 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் 94, 49, 36 பேர் மேற்படி நோயால் பாதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளிலிருந்தே இந்த நோய் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர்.
3. இலங்கை மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகளை அழிப்பதற்கு இரண்டு முறைகளைப் பின்பற்றியது. ஒன்று, அவை வாழுவதற்குரிய சூழலை அழித்தல், மற்றது, அவற்றை டி.டி.ரி (DDT) போன்ற பூச்சி மருந்துகளால் அழித்தல்.
4. இலங்கை 1950 இல் இருந்து மலேரியாவை முற்றுமுழுதாக ஒழித்த நாடுகளின் பட்டியலில் தன்னையும் இணைத்துக் கொண்டது. மாலைதீவும் 2015 இல் இப்பட்டியலில் இணைந்து கொண்டது. விரைவில் ஆர்ஜன்ரீனாவும், கீர்கிஸ்தானும் இப்பட்டியலில் இடம் பிடிக்கலாம்.
5. மலேரியா நோயை இல்லாதொழிப்பதில் இந்தியா இன்னமும் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றது. இந்த விடயத்தில் இந்தியா இலங்கையிடமிருந்து பல பயனுள்ள பாடங்களைக் கற்க முடியும்.

இலங்கையில் மலேரியாவை ஒழிக்கும் பணி ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. அதாவது, 1940 இலேயே டி.டி.ரி மருந்து தெளிக்கும் பணி ஆரம்பமாகிவிட்டது.

''இலங்கையில் மலேரியா கட்டுப்பாட்டுக்கான 100 ஆண்டு முயற்சிகள் (1911 – 2011)'' என்ற ஆவணப்படம் திருவாளர்கள் பெர்னாண்டோ, வருச விதான என்ற இருவராலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் இலங்கையில் மலேரியா பற்றிய பூரண தகவல்களைத் தருகிறது.

**-தவம்**

# எழுத்தாளர் அசோகமித்திரன் காலமானார்!

இந்தியாவின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான அசோகமித்திரன் (இயற்பெயர் ஐ.தியாகராஜன்) 86 வயதில் சென்னையில் காலமானார்.

ஆந்திர மாநிலம் செகந்திராபாத்தில் பிறந்த அசோகமித்திரன் பின்னர் சென்னையில் குடியேறி வாழ்ந்து வந்தார். ஆரம்பத்தில் ஜெமினி ஸ்ருடியோவில் பணி புரிந்த அசோகமித்திரன், 1966 முதல் முழுநேர எழுத்தாளராக மாறினார்.

தமிழில் மட்டுமன்றி. ஆங்கிலத்திலும் பல நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதியுள்ள அசோகமித்திரன், 'கணையாழி' சஞ்சிகையில் ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.